©
தமிழ்நாடு அரசு
2021

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 4.00 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 14] சென்னை, புதன்கிழமை, ஏப்ரல் 7, 2021
பங்குனி 25, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2052

# பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

## அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

### தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

*[அரசாணை (நிலை) எண்.33, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (M2)த் துறை நாள்: 17 பிப்ரவரி 2021.]*

**1948–ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 63/1948) 112–ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 1950–ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் விதிகளில் பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 115–ஆம் பிரிவின்கீழ் கோரியுள்ளவாறாக, ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.**

**திருத்தங்கள்**

மேற்சொன்ன விதிகளில்,–

(1) விதி 86–இல், "**படிவ எண் 12–இன் நெடும்பத்தி (3)**" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "**படிவ எண் 12இன் நெடும்பத்தி (6)**" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்;

(2) விதி 88இன் துணை விதி (2)இல், "பதினைந்து காசு" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "ஐந்து ரூபாய்" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்;

(3) 103 ஆம் விதிக்குப் பதிலாக பின்வரும் விதி அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்; அவையாவன;–

"103 தற்காலிகப் பணியாளர் வருகைப் பட்டியல் மற்றும் பதிவேடுகளை வைத்து வருதல்.(1) ஒவ்வொரு தொழிற்சாலையின் மேலாளர் தொழிற்சாலையில் பணிபுரியும் அனைத்து தொழிலாளர்களின் வருகைப்பட்டியலை படிவம் 25–இல் வைத்து வருவதுடன், பணியின் ஒவ்வொரு காலத் தொடக்கத்திலும் பதிவுகள் செய்யப்பட வேண்டும்.

(2) மேலாளர், பணி நேரங்களில் அல்லது தொழிற்சாலையில் யாதொரு பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போது, ஆய்வாளரிடம் ஆய்வுக்காக அத்தகைய தற்காலிக பணியாளர் வருகைப் பட்டியல் அனைத்து நேரங்களிலும் உடனடியாக கிடைப்பதற்கு வகை செய்வதுடன், கடைசிப் பதிவுக்குப் பின்னர் மூன்றாண்டு காலங்களுக்கு பாதுகாத்து வரவேண்டும்.

(3) படிவம் 12–இல் உரிய வயதடைந்த தொழிலாளர்கள் மற்றும் இளைஞர்கள் குறித்த பதிவேடு, படிவம் 15–இல் ஊதியங்களுடன் கூடிய விடுப்புப் பதிவேடு மற்றும் படிவம் 25–இல் தற்காலிகப் பணியாளரின் வருகைப்பட்டியல் மற்றும் ஈடுசெய்யும் விடுமுறை நாட்களின் பதிவேடு ஆகியவை இதன் கீழ் குறிப்பிடப்பட்ட பதிவேடுகள் மற்றும் தற்காலிக பணியாளர் வருகைப் பட்டியலின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு கருதிப் பார்க்கப்படும், அவையாவன;–

(*i*) 75–ஆம் விதியின் படி, படிவம் XXVI–இல், ஒப்பந்த தொழிலாளரை பணியமர்த்துதல் குறித்த பதிவேடு, 78–ஆம் விதியைச் சேர்ந்த (1) துணை விதியின் பகுதி (a)–இன் படி, படிவம் XVII–இல் ஊதியங்கள் குறித்த பதிவேடு, தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு ஒப்பந்த தொழிலாளர் (முறைப்படுத்தலும், நீக்கலும்) விதிகளின் 78–ஆம் விதியின் (1) துணை விதியின் (d) இன் படி, முன் பணங்கள், சேதம் அல்லது இழப்பிற்கான பிடித்தங்கள் மற்றும் அபராதங்கள் குறித்த பதிவேடு;

(*ii*) 49–ஆம் விதியின் படி படிவம் XIII–இல், ஒப்பந்ததாரரால் பணியமர்த்தப்பட்ட குறித்த பதிவேடு, 52–ஆம் விதியின் துணை விதி (2)– இன் பகுதி (a)–இன் படி, படிவம் XVII–இல் தற்காலிக பணியாளர் வருகைப் பட்டியல், குறித்த பதிவேடு 52–ஆம் விதியின் துணை விதி (2)–இன் பகுதி (a)–இன் படி, படிவம் XVIII–இல், ஊதியங்கள் குறித்த பதிவேடு, 52–ஆம் விதியின் துணை விதி (2)–இன் பகுதி (c)–இன் படி, படிவம் XIX–இல் சேதம் அல்லது இழப்பிற்கான பிடித்தங்கள் குறித்த பதிவேடு, 52–ஆம் விதியின் துணை விதி (2)–இன் பகுதி (c)–இன் படி, படிவம் XX–இல் அபராதங்கள் குறித்த பதிவேடு, 52–ஆம் விதியின் துணை விதி (2)–இன் பகுதி (c)–இன் படி, படிவம் XXI–இல் முன் பணங்கள் குறித்த பதிவேடு, 1983–ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையேயான புலம்பெயர் தொழிலாளர் (வேலைவாய்ப்பினை முறைப்படுத்தலும், பணி நிபந்தனைகளும்) (தமிழ்நாடு) விதிகளின் 52–ஆம் விதியின் துணை விதி (2)–இன் பகுதி (d)–இன் படி படிவம் XXII–இல் மிகை நேரப்பணி குறித்த பதிவேடு;

(*iii*) 3–ஆம் விதியின் படி, படிவம் I–இல் அபராதங்கள் குறித்த பதிவேடு, 4–ஆம் விதியின் படி படிவம் II–இல் பணியமர்த்தப்பட்ட நபர்களின் கவனக்குறைவு அல்லது தவறு காரணமாக வேலையளிப்பவருக்கு ஏற்பட்ட சேதம் அல்லது இழப்பிற்கான பிடித்தங்கள் குறித்த பதிவேடு, தமிழ்நாடு 1937–ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்கல் விதிகளின் 17–ஆம் விதியின் படி, படிவம் III–இல் பணியமர்த்தப்பட்ட நபர்களுக்கு அளிக்கப்பட்ட முன்பணங்கள் குறித்த பதிவேடு;

(*iv*) 21–ஆம் விதியின் துணை விதி (4)–இன் படி படிவம் I–இல், அபராதங்கள் குறித்த பதிவேடு, 21–ஆம் விதியின் துணை விதி (4)–இன் படி படிவம் II–இல் பணியமர்த்தப்பட்ட நபரின் கவனக்குறைவு அல்லது தவறு காரணமாக வேலையளிப்பவருக்கு ஏற்பட்ட சேதம் அல்லது இழப்பிற்கான பிடித்தங்கள் குறித்த பதிவேடு, 26–ஆம் விதியின் துணை விதி (2)–இன் படி படிவம் IV–இல் தொழிலாளர்களுக்கான மிகைநேரப்பணி குறித்த பதிவேடு, 27–ஆம் விதியின் துணை விதி (5)–இன் படி படிவம் V–இல் தற்காலிக பணியாளர் வருகைப் பட்டியல் மற்றும் 1953–ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் (தமிழ்நாடு) விதிகளின் 27–ஆம் விதியைச் சேர்ந்த துணை விதி (6)–இன் படி படிவம் XI–இல் தொழிலாளர்கள் குறித்த பதிவேடு;

(*v*) தமிழ்நாடு 1967–ஆம் ஆண்டு பேறுகால சலுகைச் சட்டத்தின் 3–ஆம் விதியின் துணை விதி (1)–இன் படி, படிவம் A–இல் தற்காலிக பணியாளர் வருகைப் பட்டியல்;

(*vi*) தமிழ்நாடு 1959–ஆம் ஆண்டு தொழிலக நிறுவனங்களின் (தேசிய, பண்டிகை மற்றும் சிறப்பு விடுமுறைகள்) விதிகளின் 7–ஆம் விதியின் துணை விதி (1)–இன் படி, படிவம் VI–இல் தேசிய பண்டிகை மற்றும் சிறப்பு விடுமுறைகள் குறித்த பதிவேடு;

(*vii*) தமிழ்நாடு 1981–ஆம் ஆண்டு தொழிலக நிறுவனங்கள் தொழிலாளர்களுக்கு நிரந்தர தகுதிநிலை வழங்குதல்) விதிகளின் 6–ஆம் விதியின் துணை விதி (1)–இன் படி, படிவம் I–இல் தொழிலாளர் குறித்த பதிவேடு;

(*viii*) தமிழ்நாடு 1981–ஆம் ஆண்டு பிழைப்பூதியப் படி வழங்கல் விதிகளின் 3–ஆம் விதியின் படி, படிவம் எண் I–இல், "பணியிடைநீக்கம் செய்யப்பட்ட பணியாளர்கள் குறித்த பதிவேடு.;

(***ix***) தமிழ்நாடு 1973–ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதி விதிகளின் 29–ஆம் விதியின் படி, படிவம் எண் B–இல், ஊதியங்கள் குறித்த பதிவேடு, படிவம் C–இல் அபராதங்கள் மற்றும் செலுத்தப்படாமல் சேர்ந்து வந்த தொகை குறித்த பதிவேடு.";

(4) படிவம் எண்.12, படிவம் எண் 15, படிவம் எண். 25 ஆகியவற்றுக்குப் பதிலாக பின்வரும் படிவங்கள் முறையே அமைத்துக்கொள்ளப்பட வேண்டும், அதாவது:—

"படிவம் எண். 12

(80, 86 விதிகளின் கீழ் வரையறுக்கப்பட்டது)

உரிய வயதடைந்த தொழிலாளர்கள் மற்றும் இளைஞர்கள் குறித்த பதிவேடு

தொழிற்சாலையின் பெயரும் முகவரியும்

பதிவெண்:

| தொடர் எண் | தொழிலாளரின் பெயர் | தொழிலாளரின் அடையாள அட்டை எண் | பாலினம் | தந்தை / கணவன் / மனைவி பெயர் | பிறந்த நாள் | தற்போதைய முகவரி | நிரந்தர முகவரி | ஆதார் எண் | பணியில் சேர்ந்த நாள் | பதவிப் பெயர் / பணியின் தன்மை | தொழிலாளர் வருங்கால வைப்புநிதி எண் (EPF) / உலகளாவிய கணக்கு (UAN) எண் | தொழிலாளர் ஈட்டுறுதிக் கழக எண் (ESIC No) | பணியில் சேர்ந்து 480 நாட்கள் நிறைவடைந்த நாள் | பணி நிரந்தரம் செய்யப்பட்ட நாள் | பணியிடைநீக்கம் செய்யப்பட்ட கால அளவு (ஏதேனுமிருப்பின்) | வங்கி கணக்கு எண், வங்கியின் பெயர், கிளை (IFSC) | புகைப்படம் | கைபேசி எண் | மின்னஞ்சல் முகவரி | மாதிரி கையொப்பம் / கைப்பெருவிரல் ரேகைப்பதிவு | பணியிலிருந்து வெளியேறிய நாள் | பணியிலிருந்து வெளியேறியதற்கான காரணம் | குறிப்புரைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) | (16) | (17) | (18) | (19) | (20) | (21) | (22) | (23) | (24) |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | |

''படிவம் எண். 15

(87, 88-ஆம் விதிகளின் கீழ் வரையறுக்கப்பட்டது)

**ஊதியத்துடன் கூடிய விடுப்புக்கான பதிவேடு**

(பகுதி I)

தொழிற்சாலை பெயர் மற்றும் முகவரி:

தொழிற்சாலை விவகாரங்களுக்கு பொறுப்பு வகிப்பவரின் பெயர் மற்றும் முகவரி:

மேலாளரின் / பொறுப்பாளரின் பெயர்:

பதிவு எண்:

----------- ஆம் ஆண்டின் ----------- மாதத்திற்கானது

| | | | |
|---|---|---|---|
| | (1) | தொடர் எண் | |
| | (2) | உரிய வயதடைந்த தொழிலாளர்கள் மற்றும் இளைஞர்களுக்கான பதிவேட்டில் உள்ள தொடர் எண் | |
| | (3) | தொழிலாளரின் பெயர் | |
| | (4) | தொழிலாளர் அடையாள அட்டை எண் | |
| ஈட்டிய விடுப்பு | (5) | மாதத்தின் தொடக்கத்திலிருந்த விடுப்பு | |
| | (6) | அப்போதைய கால அளவில் ஈட்டிய விடுப்பு | |
| | (7) | அந்த மாதத்தில் எடுக்கப்பட்ட விடுப்பு | |
| | (8) | மாதத்தின் இறுதியில் எஞ்சியிருந்த விடுப்பு | |
| மருத்துவ விடுப்பு | (9) | மாதத்தின் தொடக்கத்திலிருந்த விடுப்பு | |
| | (10) | அந்த மாதத்தின் போது எடுக்கப்பட்ட விடுப்பு | |
| | (11) | மாதத்தின் முடிவில் எஞ்சியுள்ள விடுப்பு | |
| ஏனைய விடுப்பு | (12) | மாதத்தின் தொடக்கத்திலிருந்த விடுப்பு | |
| | (13) | அந்த மாதத்தின் போது எடுக்கப்பட்ட விடுப்பு | |
| | (14) | மாதத்தின் முடிவில் எஞ்சியிருந்த விடுப்பு | |
| பேறுகாலப் பயன்கள் | (15) | கருவுற்ற நிலை / பிரசவம் குறித்த அறிவிப்பு வழங்கப்பட்ட நாள் | |
| | (16) | மகப்பேறினை எதிர்பார்த்து அதன் அடிப்படையில் முன்னதாகவே வழங்கப்பட்ட பேறுகால உதவித் தொகை மற்றும் தொகை வழங்கப்பட்ட நாள் | |
| | (17) | தொடர்ந்து வழங்கப்பட்ட பேறுகால உதவித் தொகை மற்றும் தொகை வழங்கப்பட்ட நாள் | |
| | (18) | மருத்துவ ஊக்கத் தொகையாக வழங்கப்பட்ட தொகை மற்றும் தொகை வழங்கப்பட்ட நாள் | |
| | (19) | 1961–ஆம் ஆண்டு பேறுகால சலுகைச் சட்டத்தின் 9 அல்லது 10–ஆம் பிரிவின் படி ஊதியத்துடன் கூடிய விடுப்பு | |
| பணிக்கொடை பயன்கள் | (20) | தொழிலாளரிடமிருந்து நேமகம் பெறப்பட்டதா இல்லையா | |
| | (21) | தொழிலாளரின் வெளியேற்றம் அல்லது இறப்பு குறித்த நேர்வில் பணிக்கொடையாக வழங்கப்பட்ட தொகை | |
| | (22) | குறிப்புரைகள் | |

(பகுதி - II)

தொழிற்சாலையின் பெயர் மற்றும் முகவரி:

பணியமர்த்தப்பட்டுள்ள தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை

| ஆண் | பெண் | வளரிளம் பருவ ஆண் | வளரிளம் பருவ பெண் |
|---|---|---|---|
| | | | |

தொழிற்சாலை விவகாரங்களுக்கு பொறுப்பு வகிப்பவரின் / சம்பளம்

வழங்கும் அதிகாரியின் பெயர் மற்றும் முகவரி:

மேலாளரின் / பொறுப்பாளரின் பெயர்:

பதிவு எண்:

------------ லிருந்து ------------ காலம் வரையிலான ஊதிய கால அளவு.

(மாதந்தோறும் / இரண்டு வாரங்களுக்கொருமுறை / வாரந்தோறும் / நாள்தோறும் / செய்யும் வேலைக்கேற்ப ஊதியம்)

| | | | | |
|---|---|---|---|---|
| (1) | தொடர் எண் | | | |
| (2) | உரிய வயதடைந்த தொழிலாளர்கள் மற்றும் இளைஞர்களுக்கான பதிவேட்டில் உள்ள தொடர் எண் | | | |
| (3) | தொழிலாளரின் பெயர் | | | |
| (4) | தொழிலாளரின் அடையாள அட்டை எண் | | | |
| (5) | பணி செய்த மொத்த நாட்கள் | | | |
| (6) | அடிப்படை ஊதியங்கள் | | | |
| (7) | அகவிலைப்படி | | | |
| (8) | வீட்டு வாடகைப்படி | | | |
| (9) | ஏனைய படிகள் (தன்மை குறிப்பிடலாம்) | | | |
| (10) | மிகை நேரப்பணி ஊதியங்கள் | | | |
| (11) | விடுப்பு ஊதியங்கள் (ஈட்டிய விடுப்பு / தேசிய, பண்டிகை & சிறப்பு விடுப்பு / ஏனையவை) | | | |
| (12) | மொத்த ஊதியங்கள் | | | |
| (13) | வருங்கால வைப்பு நிதி | | பிடித்தங்கள் | |
| (14) | தொழிலாளர்கள் காப்புறுதி | | | |
| (15) | தொழிலாளர் நல நிதி | | | |
| (16) | வழங்கப்பட்ட முன்பணம் | முன்பணங்கள் | | |
| (17) | மாதத்தின் தொடக்கத்தில் வசூலிக்காமல் நிலுவையிலிருந்த முன்பணம் | | | |
| (18) | வசூலிக்கப்பட்ட முன்பணம் | | | |
| (19) | வசூலிக்கப்பட வேண்டிய நிலுவைத்தொகை | | | |
| (20) | சேதங்கள், இழப்புகள் அல்லது அபராதங்கள் வகையில் செய்யப்பட்ட பிடித்தம் | சேதங்கள் / அபராதங்கள் | | |
| (21) | மாதத்தின் தொடக்கத்தில் வசூலிக்கப்படாமல் நிலுவையிலிருந்த பிடித்தத் தொகை | | | |
| (22) | சேதங்கள், இழப்புகள் அல்லது அபராதங்கள் வகையில் செய்யப்பட்ட பிடித்தம் | | | |
| (23) | வசூலிக்கப்படாமல் நிலுவையிலுள்ள தொகை | | | |
| (24) | ஏனைய யாதொரு பிடித்தங்கள் | | | |
| (25) | மொத்த பிடித்தங்கள் | | | |

**"படிவம் எண். 25**

(77 (4), 103-ஆம் விதிகளின் கீழ் வரையறுக்கப்பட்டது)

தற்காலிகப் பணியாளர் வருகைப் பட்டியல் மற்றும் ஈடுசெய்யும் விடுமுறை நாட்கள் குறித்த பதிவேடு

............... லிருந்து ................ வரையிலான கால அளவிற்கானது

தொழிற்சாலையின் பெயர் மற்றும் முகவரி:

பதிவு எண்:

பண்டிகைக்கால விடுமுறைகளுக்கு ஒப்புதலளிக்கப்பட்ட

செயல்முறை ஆணைகள் எண் & நாள்:

ஒப்புதலளிக்கப்பட்ட பண்டிகைக்கால விடுமுறைகள்:

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |

| தொடர் எண் | உரிய வயதடைந்த தொழிலாளர்கள் மற்றும் இளைஞர்களுக்கான பதிவேட்டில் உள்ள தொடர் எண் | தொழிலாளியின் பெயர் | தொழிலாளியின் அடையாள அட்டை எண் | வேலை தொடங்கும் நேரம் | ஓய்வு இடைவேளை | வேலை முடிவடையும் நேரம் | முறை மாற்றுப் பணிகளின் திட்டம் | மிகை நேரப்பணி நேரம் உட்பட அன்றாட பணி நேரம் (ஏதேனுமிருப்பின்)* | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | வேலை செய்த மொத்த நாட்கள் | வேலை செய்த மொத்த நேரம் | ஊதியமில்லா விடுப்பெடுத்த மொத்த நாட்கள் | தேசிய விடுமுறை நாளில் வேலை செய்தற்காக பெறப்பட்ட பயன் | பண்டிகை விடுமுறை நாளில் வேலை செய்தற்காக பெறப்பட்ட பயன் | குறிப்புரைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | | | | | | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| | | | | | | | இடைமாற்றீடு நேரம் | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | நேரம் | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |

**முகமது நசிமுத்தீன்,**
*அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

ந. அருள்,
இயக்குநர்
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை**

*[அரசாணை (நிலை) எண் 17, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (M2)த் துறை, 29 ஜனவரி 2021.]*

1948–ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 63/1948) 49 மற்றும் 112–ஆம் பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை கொண்டு. தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 1953–ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் (நல அலுவலர்கள்) விதிகளில் பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார், இதன் வரைவு மேற்சொன்ன சட்டத்தின் 115–ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ் கோரியுள்ளவாறு, ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

**திருத்தங்கள்**

மேற்சொன்ன விதிகளில்,–

(1) 4–ஆம் விதியில்,–

(a) பகுதி (a)–இன் துணைப் பகுதி (ii)–இல், "வர்த்தகம் (பணியாளர் மேலாண்மை மற்றும் தொழில் தொடர்புகள்) அல்லது" என்ற சொற்றொடருக்குப் பின்னர், "மனித வள மேலாண்மை அல்லது அதற்கு சமமான அல்லது" என்ற சொற்றொடர் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும்.

(b) பகுதி (c)–க்குப் பதிலாக, பின்வரும் பகுதி அமைத்துக் கொள்ளப்பட வேண்டும். அதாவது:

"(c) தமிழ் மொழியில் போதிய அறிவு பெற்றிருத்தல்"

(c) இரண்டாவது வரம்பு நிபந்தனைக்குப் பின்னர், பின்வரும் வரம்பு நிபந்தனை சேர்த்துக் கொள்ளப்படவேண்டும், அதாவது:–

மேலும், தொழிற்சாலையில் நியமனம் செய்யப்பட்ட நல அலுவலர், அவ்வாறு நியமிக்கப்பட்ட நாளிலிருந்து ஓராண்டிற்குள், தொழிற்சாலையின் பெரும்பான்மையான தொழிலாளர்களால் பேசப்படும் மொழியில் போதிய அறிவு பெற்றிருப்பதை தொழிற்சாலை விவகாரங்களுக்குப் பொறுப்பு வகிப்பவர் உறுதி செய்யவேண்டும்.".

(2) 5–ஆம் விதியின் துணைவிதி (1)-இல்,–

(a) "மாநிலத்தில் தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் அதிகளவில் விற்பனையாகும் இரண்டு செய்தித்தாள்கலில் காலிப்பணியிடத்திற்கான விளம்பரம் செய்யப்படும்:" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, மாநிலத்தில் தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் அதிகளவில் விற்பனையாகும் இரண்டு செய்தித்தாள்களில் அல்லது முதன்மையான இணையவழி வேலைவாய்ப்பு வலைவாசலில் காலிப்பணியிடத்திற்கான விளம்பரம் செய்யப்படும்:" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்:

(b) முதல் வரம்பு நிபந்தனைக்குப் பதிலாக, பின்வரும் வரம்பு நிபந்தனை அமைத்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது:

"ஆனால், இந்த துணை விதியில் வரையறுக்கப்பட்டவாறு, காலிப்பணியிடங்களுக்கு விளம்பரம் செய்வதன் வாயிலாக, தகுதிவாய்ந்த அனைத்து நபர்களிடமிருந்து விண்ணப்பங்களை வரவேற்பதுடன், வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களின் பெயர்களை கோரிப் பெறுவதன் வாயிலாக அரசு நிறுவனத்தில், அரசு சார்பு நிறுவனத்தில், பொதுத்துறை நிறுவனத்தில் அல்லது அரசு நிதியுதவி பெறும் தனியார் நிறுவனத்தில் உள்ள காலிப்பணியிடம் நிரப்பப்படும்."

(3) இணைப்பில், நெடும்பத்தி (1)-இன் தொடர் எண் 62 மற்றும் அதன் நெடும்பத்திகள் (2) மற்றும் (3)–இன் தொடர்புடைய நிகரான பதிவுகளுக்குப் பின்னர், பின்வரும் பதிவுகள் முறையே சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது:–

| | | |
|---|---|---|
| "63. | நிருவாகச் சட்டத்துடன் தொழிலாளர் சட்டங்களில் பட்டயப்படிப்பு (வார இறுதியில் பகுதி நேரமாக) | தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம், சென்னை" |

**முகமது நசிமுத்தின்,**
*அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி*
*(மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.